# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 557/2022**

Prosecution witness: **1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜோதி என்ற மோகனசுந்தரம் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

**A1, A2 , A3 present.**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடியில் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7-8 வருடங்களுக்கு முன்னர் கையெழுத்து போட்டேன். எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. தங்கராஜ்-என்பரை தெரியும். அவர் கன்னிவாடியில் கோழிக்கடை நடத்தி வருகிறார். எனது கையொப்பத்திற்கு அடுத்து கையொப்பம் இட்ட நபர் யார் என்று தெரியாது. தங்கராசை தெரியும். நான் கையெழுத்திட்டபோது என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் கையெழுத்து கேட்டதால் நான் போட்டேன். என்ன காரணத்திற்காக கையொப்பம்

கேட்கிறீர்கள் என்று நான் கேட்கவில்லை. அப்போது போலீசாருடன் மேலும் இரண்டு நபர்கள் சிவில் உடையில் இருந்தார்கள். அந்த சிவில் உடையில் இருந்த நபர்கள் யார் என்று நான் கேட்கவில்லை. அவர்கள் கையில் பொருட்கள் எதுவும் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். சிவில் உடையில் இருந்த நபர்கள் ஆஜர் எதிரிகளா என்றால் அன்று பார்த்த நபர்கள் ஆஜர் எதிரிகள் அல்ல. சோதனை சம்மத கடிதத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆகும். ஒப்புதல் வாக்குமூலம் எனப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகும். 17.30 மணிக்கு தயாரித்ததாக கூறப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ. 3 ஆகும். 18.00 மணிக்கு தயாரித்ததாக கூறப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ. 4 ஆகும்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பிறந்தது முதல் கன்னிவாடியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஒட்டஞ்சத்திரம், கன்னிவாடி,ரெட்டியார் சத்திரம், மூலச்சத்திரம், ஸ்ரீராமபுரம், பண்ணபட்டி, வெள்ளமடத்துபட்டி ஆகிய ஊர்களை பற்றி தெரியும். தருமத்துப்பட்டி கன்னிவாடியில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது, கரிசப்பட்டியும் அதே வழியில் தான் உள்ளது. நான் ஆட்டோ ஓட்டுபவர் என்பதால் அந்த பகுதியில் உள்ள ஊர்களை அதில் உள்ள முக்கியமான ஆட்களையும் தெரியும். கரிசல்பட்டி ஆராக்கியம் மகன் உதய குமாரை தெரியாது. சந்தமநாயக்கன் பட்டியை தெரியும். தருமத்துப்பட்டியில் இருக்கும் சந்தமநாயக்கன் பட்டியை சேர்ந்த

சௌந்தரபாண்டியை தெரியாது. அவர் மனைவி பசுங்கிளியையும், கல்யாண தேவரையும் தெரியாது. மேற்கண்ட நபர்கள் யாரையும் தெரியும் என்றும் அவர்களை பற்றி சொன்னால் கையெழுத்து போட்ட விசயம் பற்றி கூற வேண்டியிருக்கும் என்பதால் உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் 18.05. 2013 ம் தேதி மதியம் 3.00 மணியளவில்நானும் தங்கராசும் கன்னிவாடி காவல் நிலையம் வழியே சென்றபோது காவல் ஆய்வாளர் எங்கள் இருவரையும் அழைத்து கஞ்சா இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது நீங்களும் எங்களுடன் வரவேண்டும் என்று கேட்டுகொண்டதால் நானும் தங்கராசும் அவருடன் சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. ஆய்வாளர் நாங்கள் ஒப்புக்கொண்டதன் பேரில் தருத்துப்பட்டியில் இருந்து கோம்பை செல்லும் சாலையில் பாறைகோட்டை செல்லும் மண்ரோட்டில் மெட்டுக்கோம்பை என்ற இடத்தில் ஆரோக்கியம் என்ற ராமர் தோட்டத்திற்கு அழைத்து சென்றார் என்றும் நாங்கள் தோட்டத்திற்குள் சென்றபோது அங்கு ஆஸ்பெட்டாஸ் சீட் செட்டின் முன்பாக 1 வது எதிரி சௌந்திரபாண்டி மற்றும் அவர் மனைவி பசுங்கிளி, உதயகுமார் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் போலீசாரை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தனர் என்றும் போலீசார் வளைத்து பிடிப்பதற்குள் சௌந்தரபாண்டியும், பசுங்கிளியும் தப்பி ஓடினார்கள் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. உதயகுமாரிடம் போலீசார் தங்களை அறிமுகப்படுத்தி ஆய்வாளருக்கு கிடைத்த தகவல் பற்றி கூறி உதயகுமார் கையில் வைத்திருந்த பொட்டலம் பற்றி கேட்டபோது அவர் கஞ்சா என்றும் 1-2 எதிரிகள் அனுப்பும் நபரிடம் அந்த பொட்டலத்தை ஒப்படைக்கும் படி உதயகுமாரிடம் கூறியதாக அவர் தகவல் சொன்னார் என்று போலீசார் விசாரணையில்

கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சௌந்தரபாண்டி ஒத்திக்கு பிடித்திருந்த மேற்படி தோட்டத்தில் ஆஸ்பெட்டாஸ் செட்டிற்குள்ளாக மேலும் 2 மூடைகளில் கஞ்சா இருப்பதாக கூறினார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. உதய குமாரிடம் அவரை சோதனை செய்வதற்காக சோதனை விபரங்களை கூறி அவர் சம்மதம் பெற்று சோதனை சம்மத கடிதம் தயாரித்தார் என்றும் அதை உதய குமாருக்கு சார்பு செய்து உதய குமார் சம்மத தெரிவித்த கடிதத்தில் நானும் தங்கராசும் கையொப்பம் செய்தோம் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. உதயகுமார் கையில் இருந்த பாலிதீன் உறையை ஆய்வாளரிடம் கொடுத்த நிலையில் ஆய்வாளர் அதை பெற்று பிரித்தபோது அதில் கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது என்றும் அதுபற்றி விசாரித்தபோது மாலை 4.30 மணிக்கு உதயகுமார் தம்மிச்சையாக ஒரு வாக்குமூலம் கொடுத்தார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனை என் முன்பாகவும், தங்கராஜ் முன்பாகவும் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் உதயகுமார் எடுத்து ஆஜர் படுத்திய பாலிதீன் பையில் இருந்த கஞ்சா வை எடைபோட்டபோது அதில் 2 கிலோ கஞ்சா இருந்தது என்றும் அதில் தலா 100 கிராம் எடையுள்ள கஞ்சாவை ஆய்வாளர் 2 காக்கி பேப்பரில் கட்டி சீல் வைத்து மீதம் உள்ள கஞ்சாவை மடித்து நூலால் கட்டி சீல் வைத்து மேற்படி இரண்டு கிலோ கஞ்சாவையும் கைப்பற்றியதற்கு அத்தாட்சி தயாரித்தார் என்றும் அதில் நானும் தங்கராசும் கையொப்பம் செய்தோம் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் உதயகுமார் ஆஸ்பெட்டாஸ் செட்டிற்குள் இருந்த இரண்டு மூடைகளை அடையாளம் காட்டினார்எ னறும் அதை போலீசார் பெற்று

எடைபோட்டனர் என்றும் அதில் ஒவ்வொரு மூட்டையிலும் தலா 45 கிலோ கஞ்சா இருந்தது என்றுஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் ஒவ்வொரு மூட்டையில் தலா 100 கிராம் எடையுள்ள இரண்டு சாம்பிள்களை காக்கி கவரில் கட்டி சீல் வைத்து மீதம் இருந்த கஞ்சாவை அதே சாக்குப்பையில் நூலால் கட்டி சீல் வைத்து தலா 45 கிலோ வீதம் கைப்பற்றப்பட்ட இரண்டு மூடைகளையும் சாம்பிள் பாக்கெட்டுகளையும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றியதற்காக அத்தாட்சி தயாரித்தார் என்றும் அதில் நானும் தங்கராசும் கையொப்பம் செய்தோம் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் கைப்பற்றிய சொத்துக்களையும், உதயகுமாரையும் அவர்கள் நிலையம் கொண்டுசென்றபோது நானும் அவருடன் நிலையம் சென்றேன் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பாறைகோட்டை மெட்டுகோம்பையில் உள்ள ஆஸ்பெட்டாஸ் செட்டிற்கு நாங்கள் சென்றிருந்தோம். போலீசார் அழைத்தால் சென்றிருந்தேன். நான் எப்போது சென்றாலும் ஆட்டோவில் இருந்து இறங்குவதில்லை. போலீசார் அழைத்தால் தான் அந்த செட்டிற்கு சென்றேன். நான் ஆஸ்பெட்டாஸ் செட்டிற்குள் என்ன இருந்தது என்று நான் பார்க்கவில்லை. 18.05.2013 அன்று மதியம் 3.00 முதல் 6.00 மணிக்குள்ளாக இருக்கும் என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. நான் எந்த அமைப்பிலும் உறுப்பனராக இல்லை. எனக்கு எதிரியை தெரியும் என்றும் எதிரிகள் எங்கள் பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கன்னிவாடி காவல் நிலையத்தில் போடப்படும் மற்ற அதிகமான வ ழக்குகளில் நான் சாட்சியாக இருந்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கையிருப்பு சாட்சியாக இருப்பேன் என்றால் அதிக வழக்குகளில் சாட்சியாக இருக்கிறேன்.